முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : **1446**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**14.09.2023**, வியாழக்கிழமை

1. வரம் பெற்று ஞான உலகம் படைக்க
வள்ளலாய் வந்த ஆறுமுக அரங்கனே
அறம்போற்றும் ஐயனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
2. ஆசிதனை சோபகிருது வேங்கை திங்கள்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 28ம் நாள், 14.09.2023, வியாழக்கிழமை)
அரங்கனுக்கு இன்னும் பலம் கூட எடுத்துரைப்பேன்
வாசிவென்ற ஞானியர்களெல்லாம்
வலம்வந்து அரங்கனோடு துணையாய் நிற்க
3. நிற்கவே ஓங்காரக் குடில்
நிலஉலகின் தென்கைலையாகும்
ஓங்காரம் பாடி உலகோர் அரங்கன் வழி
உயர்வாக சன்மார்க்க விதி ஏற்று வர
4. வருகவே உலகோர்க்கு மகாசக்திகளின்
வல்லமையான ஆசியும் பலமும்
துணையாகக் கிட்டி இனிதே
தொடர்ந்து அரங்கன் தர்மத்தை காப்பதாலே
5. ஆதலால் உலகோர்க்கு தர்மவான் எனும் அடையாளமோடு
அரங்கன் வழி ஞானிகளாகும் வாய்ப்பும் கிட்ட நேரும்
நேர்மைகொண்டு அரங்கன் வழிவந்தால் போதும்
நிலவுலகில் உலகோர் அனைவருக்கும் அடையாளம்
6. ஆறுமுகன் என்னாசி பெற்றோர் என்கின்ற சூட்சும பலத்தோடு
அகிலத்தில் அற்புதத்தை நிகழ்த்தும் மகாவரங்களும் கூடி
கூடியே உலகோர் அரங்கன் வழி
குறையிலா சர்வபலமும் பெற்று

7. பெற்றுமே உலகத்தை மாற்றும்
பெரும் சக்திகளாக மாறுவர்
ஆற்றல்பட அரங்கன் தர்மமும் சன்மார்க்கமும்
அகிலத்தை எல்லா வகையும் பாதுகாத்து

8. காத்துமே ஞானவான்கள் ஆளுகின்ற
ஞான ஆட்சிக்காலமாகவும் மாற்றி
ஞாலமதில் அரங்கன் நோக்கம் வெற்றியாகக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–